இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 20-10-2024

# தொழிலும் தொழிலாளரும்

சாம்சங் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்த்து வைத்துள்ளது தி.மு. கழக அரசு. தொழிலாளர்கள் மீண்டும் பணிக்குத் திரும்ப வழிவகை அமைத்துத் தந்துள்ளது அரசு. 'தொழில் அரசு மட்டுமல்ல, தொழிலாளர் அரசும் இது' என்பதை மெய்ப்பித்துக் காட்டி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

சாம்சங் நிறுவனத்துக்கும் அதில் பணியாற்றும் தொழிலாளர்க்கும் பிரச்சினை ஏற்பட்ட போது, வழக்கமாக தி.மு.க. என்றால் கசக்கும் பிறவிகள், இதனை வைத்து ஆட்சிக்கும், கட்சிக்கும் கெட்ட பெயரை ஏற்படுத்தப் பார்த்தார்கள். சமூக வலைத்தளங்களில் சில பூர்ஜுவாக்களும், பெட்டி பூர்ஜுவாக்களும் எழுதிய எழுத்துக்கள் எல்லாம் பாட்டாளிகள் மீதான பாசம் அல்ல, தி.மு.க. மீதான வெறுப்பு ஆகும்.

**ஏராளமான தொழில்களைக் கொண்டு வந்து, அபரிதமான முதலீடுகளை ஈர்த்து, தாராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கி வருகிறாரே மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்பதை நினைத்து நினைத்து வெம்பி வெம்பி இத்தகைய அவதூறுகளைக் கிளப்பினார்கள். வலதுசாரிகளும் இடதுசாரி வேடமிட்டு குத்தாட்டம் போட்டார்கள். சுமூகமான பேச்சுவார்த்தைக்கு தொழில் நிறுவனத் தரப்பையும், தொழிலாளர் தரப்பையும் உட்கார வைத்ததில்தான் முதலமைச்சரின் வெற்றி அடங்கி இருக்கிறது.**

தொழிலாளர் கோரிக்கை என்னவாக இருந்தாலும், போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் என்று அமைச்சர்கள் எ.வ.வேலு, தா.மோ.அன்பரசன், சி.வி.கணேசன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோரைக் கேட்டுக் கொண்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இரு தரப்பும் மனமொப்பி ஒப்பந்தம் கையெழுத்தாகி, சுமூகமான உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. தொழிலாளர் தரப்பில் வைக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளது. தொழிலாளர்கள், பணிக்குத் திரும்புவதாக முடிவெடுத்து பணிக்குத் திரும்பிவிட்டார்கள்.

**சி.ஐ.டி.யு. தொழிற்சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட பேட்டியில், "ஆரம்பத்தில் இருந்து பேச்சுவார்த்தை சுமூகமாகச் சென்றது. இதில் சில நல்ல ஆலோசனைகளும் முடிவுகளும் எட்டப்பட்டன. இந்தப் பேச்சுவார்த்தையில் எந்தப் பின்னடைவும் ஏற்படவில்லை. எந்தக் குழப்பமும் இல்லை. வேறு எந்தப் பிரச்சினையும் இல்லை. அனைத்தும் சிறப்பாகவே நடைபெற்றது. சங்கத்தைப் பதிவு செய்யும் விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது. எனவே அந்தத் தீர்ப்புக்கு நாங்கள் கட்டுப்படுவோம் என்று ஏற்கனவே அறிவித்துவிட்டோம். இதையே இப்போதும் சொல்கிறோம். நிர்வாகத்துக்கும் எங்கள் சங்கத்துக்கும் ஒரு பொறுப்பு இருக்கிறது. அதைத்தான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். மாநில அரசின் முயற்சியின் காரணமாக எங்கள் கோரிக்கைக்கு நிர்வாகம் செவி சாய்த்திருக்கிறது. இதில் ஒரு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. எனவே முதலமைச்சர் எடுத்த முயற்சிக்கு பாராட்டுத் தெரிவிக்கிறோம்" என்று குறிப்பிட்டுள்ளதில் அனைத்தும் அடங்கி இருக்கிறது.**

போராடிய தொழிலாளர்கள் மீது எந்த நடவடிக்கையும் இருக்காது என்ற உறுதிமொழியை அரசு பெற்றுத் தந்துள்ளது. "வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணிக்குத் திரும்பும் தொழிலாளர்கள் மீது எந்தவித பழிவாங்கும் நடவடிக்கையையும் நிறுவனம் எடுக்கக் கூடாது" என்று சொல்லப்பட்டுள்ளது. தொழிலாளர்கள் முன்வைத்த ஊதிய உயர்வு மற்றும் பொதுக் கோரிக்கையின் மீது எழுத்துப்பூர்வமான பதிலுரையை சமரச அலுவலர் முன்பு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கைதான் 'திராவிட மாடல்' ஆட்சியின் இலக்கணம் ஆகும். அது மட்டுமல்ல, மக்களாட்சியின் இலக்கணம் ஆகும்.

"தமிழ்நாடு அரசு தொழிலாளர் நலனிலும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதிலும் அக்கறையுடன் செயல்படுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளம் பெருக வேண்டும். அதன் மூலமாக தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருக வேண்டும். தொழில் வளத்தை உருவாக்குவதில் முதுகெலும்பாக விளங்கும் தொழிலாளர்களது உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதில் பின் வாங்க மாட்டோம். தொழில் அமைதிக்கு உகந்த மாநிலமாகச் செயல்படுவோம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**"தொழிலாளர் நலன் காக்க வேண்டும். தொழில் வளம் பெருக வேண்டும்" - என்பதையே இரு கண்களாக பாவித்து தமிழ்நாடு அரசு செயல்படுவதாக முதலமைச்சர் அவர்கள் சொல்லிய சொல், மிகமிக முக்கியமானது.**

**தொழில் நிறுவனங்கள் இல்லாமல் புதிய வேலை வாய்ப்புகள் இல்லை. தொழிலாளர்கள் இல்லாமல், தொழில் நிறுவனங்கள் செயல்பட முடியாது. இரண்டு தரப்பும் ஒன்றையொன்று சார்ந்தவை. ஒன்றின் மூலமாகத்தான் பிறிதொன்று வளர வேண்டும். இதனை இரண்டு தரப்புக்கும் உணர்த்தி இருக்கிறார் முதலமைச்சர் அவர்கள்.**

இந்தப் பிரச்சினை சுமூகமாக முடிந்துவிடக் கூடாது என்பதற்காக சிலர் கூலிப்படைகளைப் போல இணையத் தளங்களில் செயல்பட்டார்கள். கோரிக்கை வைக்கும் தொழிலாளர்களும், அவர்கள் பணியாற்றும் நிறுவனமும் பேச்சுவார்த்தைகளில் இருக்கும் போது அதனைக் குலைக்கும் வகையில் இத்தகைய சக்திகள் செயல்பட்டார்கள். தொழிலாளர்களுக்கு நல்லது செய்வது போல நடித்து, நிறுவனமே வெளியே போகப் போகிறது என்று வதந்தி கிளப்பினார்கள்.

'தொழிலுக்கு உகந்த மாநிலம் அல்ல' என்று ஒரு புறமும், 'தொழிலாளர் விரோத அரசு' என்று மறுபுறமும் கிளப்பினார்கள். உணர்ச்சிவசப்படாமல், நடுநிலைத் தன்மையுடன் பேச்சுவார்த்தை நடத்தி, இருதரப்புக்கும் நன்மை செய்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர். இதனை இரு தரப்பும் உணர்ந்து எதிர்காலத்தில் ஒருவருக்கொருவர் நட்பு சக்தியாகச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.10.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் மணிக்கோ பன்னீர்செல்வம் சந்தித்து, தான் எழுதிய "நீலச்சட்டைக் கலைஞர்" புத்தகத்தை வழங்கினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (18.10.2024) முகாம் அலுவலகத்தில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி சந்தித்து, தான் எழுதி, தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட "திராவிடர் இயக்கமும்", "கருப்பர் இயக்கமும்" என்ற நூல் வெளியீட்டு விழா 25.10.2024 அன்று சென்னை, அண்ணா அறிவாலயத்தில் நடைபெறவுள்ளதையொட்டி அவ்விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்

### தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# 'முரசொலி செல்வம்' படத்திறப்பு - புகழஞ்சலி!

## திருவுருவப் படத்தினை கி.வீரமணி திறந்து வைக்கிறார்!

சென்னை, அக்.20-

'முரசொலி' எனும் கழகத்தின் போர்வாளும் கேடயமுமான இலட்சியப் பேரிகையின் முன்னாள் ஆசிரியர் - இந்தியத் திருநாட்டின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவர் - பல திரைப்படங்களின் தயாரிப்பாளர் - தலைசிறந்த திராவிட இயக்கச் சிந்தனையாளர் - தன்னிகரற்ற எழுத்தாளர் - 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' எனும் பேரறிஞர் பெருந்தகையின் கூற்றுக்கொப்ப - எதிரிகளிடமும் நட்பு பாராட்டும் நல்லியல்பினர் - சிறந்த குணங்களின் கலவையாக, ஒருமுகமாகத் திகழ்ந்த தகைமையாளர் - சிரித்த முகத்துக்குச் சொந்தக்காரர் - முரசொலி செல்வம் அவர்கள்!



"வாடிய முகத்துடன் அந்தக் கூண்டுக்குள் செல்வம் நின்றிருந்தால் என்னகம் வாடிப் போயிருக்கும். அந்தச் செல்வத்தின் பெயரை இந்தச் செல்வத்துக்கு எத்துணைப் பொருத்தமாக அப்போதே வைத்தேன் என்று என்னையே நான் பாராட்டிக் கொண்டேன்.

எனது மகள் செல்வியுடனான திருமணத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சியை விட சட்டமன்றக் கூண்டுக்குள் செல்வம் சிரித்துக் கொண்டிருப்பதை பார்த்து பெரும் ஆனந்தம் அடைந்தேன்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்ட வரலாற்றுக்குரிய திராவிட இயக்கச் சிந்தனையாளர் முரசொலி செல்வம் அவர்கள் கடந்த 10-ஆம் தேதி அன்று இயற்கை எய்தினார்.

**தமிழ்நாட்டின் - திராவிட இயக்கத்தின் போர்வாள் - 'முரசொலி' சார்பில் முரசொலி செல்வம் அவர்களின் படத்திறப்பும் - புகழஞ்சலியும் நாளை (21.10.2024 - திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு - சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறுகிறது.**

**நிகழ்ச்சிக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை வகிக்கிறார்.**

**முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்தை திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் திறந்து வைக்கிறார்.**

**புகழுரையாற்றுவோர்!**

**கழகப் பொதுச் செயலாளர் - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், 'இந்து' என். ராம், புரட்சித் தமிழன் சத்தியராஜ், பேராசிரியர் மு.நாகநாதன் ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.**

### 4 ஆயிரம் மெகாவாட் சூரிய மின்சக்தி நிலையங்கள்!

# மின் உற்பத்தி மயமாகும் தென் மாவட்டங்கள்!

## ரூ.10,375 கோடியில் திட்டங்கள் – 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு!

*சென்னை, அக். 20-*

*தமிழ்நாட்டில் விரைவில் 4000 மெகாவாட் சூரிய மின் சக்தி நிலையங்கள் ஏற்படுத்துவதன் மூலம் தென் மாவட்டங்கள் மின் உற்பத்தி மையமாகிறது. 3000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக ரூபாய் 10 ஆயிரத்து 375 கோடியில் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.*

*இதுகுறித்து தினகரனில் வெளியான செய்திக் கட்டுரை வருமாறு:-*

*தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பாக 10 ஆயிரம் மெகாவாட்டாக இருந்த ஒரு நாள் மின் தேவை 20 ஆயிரம் மெகாவாட்டை கடந்து விட்டது. மின்சாரத்தின் தேவை அதிகரிக்கும் போது அதன் உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியமாகிறது. ஒரு காலத்தில் நீர் மின்சாரம், அனல் மின்சாரம் மூலமே தமிழ்நாட்டின் மின் தேவை சமாளிக்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் காற்றாலை மின் உற்பத்தி, சூரிய மின் உற்பத்தி என மரபு சாரா எரிசக்தி உற்பத்தியும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.*

*காற்றாலைகளை பொறுத்தவரை நெல்லை, குமரி, தூத்துக்குடி, தென்காசி, தேனி, திண்டுக்கல், திருப்பூர் மாவட்டங்களில் அதிகம் உற்பத்தி செய்யப்படுகிறது. மே மாதம் இறுதியில் காற்று சீசன் தொடங்கி ஜூன், ஜூலை மாதங்கள் அதிக காற்று வீசும் காலங்களாகும். இந்த மாதங்களில் காற்றாலை மின் உற்பத்தி அதிகமாக இருக்கும். இது மட்டுமல்லாது சூரிய மின் சக்தி மூலமும் மின்சாரம் உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.*

*அந்த வகையில் தமிழ்நாடு முதல்வராக மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 2021ல் பொறுப்பேற்றது முதல், தொழில் துறை, விவசாயம், வணிகம், தகவல் தொழில்நுட்ப மையங்கள், மெட்ரோ ரயில் திட்டங்கள், மின்சார வாகன மின்னூட்ட நிலையங்கள் அமைப்பதற்காக திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறார். இதன் மூலம் 2030க்குள் தமிழ்நாட்டில் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சி இலக்கை எட்டுவதற்காக தொழில் துறையினருக்கு சீரான மின்சாரம் கிடைப்பதற்கு பசுமை மின்சார திட்டங்களை ஊக்குவித்து வருகிறார்.*

*இதற்காக சுற்றுச்சூழலுக்கு மாசு இல்லாத காற்றாலை மின்சாரம், சூரிய மின்சார திட்டங்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி, விருதுநகர், நெல்லை, ராமநாதபுரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் பிஎஸ்ஜி குழுமத்தின் துணை நிறுவனமான லீப் கிரீன் எனர்ஜி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் ரூ.10,375 கோடி மதிப்பீட்டில் 3 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில் காற்றாலை, சூரிய மின் உற்பத்தி நிலையங்களை தொடங்க திட்டமிட் டுள்ளது.*

*2015ல் தொடங்கப்பட்ட லீப் எனர்ஜி நிறுவனம் திருப்பூர் மாவட்டம் மேட்டுப்பாளையம், நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் காற்றாலைகளை நிறுவியுள்ளது. 2029க்கள் 6 ஜிகாவாட் மின் உற்பத்தி திறனை உயர்த்த திட்டமிட்டுள்ள இந்த நிறுவனம் தூத்துக்குடி, நெல்லை, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் மின்சார உற்பத்தி நிலையங்களை நிறுவ உள்ளது. இந்த நிறுவனம் ஏற்கனவே தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் காற்றாலைகள் மூலம் 400 கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்து வருகிறது.*

*தற்போது மேற்கொண்டுள்ள புதிய ஒப்பந்தத்தின் படி அங்கு 2 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி திறன் கொண்ட காற்றாலை மற்றும் சூரிய மின் சக்தி திட்டத்தை தொடங்க உள்ளது. இதுதவிர தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு அய்யனார் ஊற்று பகுதியில் 1000 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி திட்டத்தையும், விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி பகுதியில் 750 கிலோவாட் துணை மின் நிலையம் அமைந்துள்ள பகுதியில் 1000 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி திட்டத்தையும் தொடங்க உள்ளது. இதன் மூலம் எதிர் காலத்தில் காற்றாலையைத் தொடர்ந்து சூரிய மின் சக்தி உற்பத்தியிலும் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்கள் சாதனை படைக்க இருக்கிறது.*

*பூமியின் வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பசுமையான மின்சாரம் உற்பத்தி அதாவது காற்றாலைகள், சூரிய மின்சக்தி ஆகியவற்றால் சுற்றுச்சூழலுக்கு எந்தக் கேடும் இல்லை. மேலும் எலக்ட்ரிக் வாகனங்கள் பயன்பாடும் ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதற்காகவே தூத்துக்குடியில் வின்பாஸ்ட் எலக்ட்ரிக் கார் உற்பத்தி ஆலைக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார். அந்த வரிசையில் தற்போது காற்றாலை, சூரிய மின் சக்தி திட்டங்களுக்கும் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய தென் மாவட்டங்களில் திட்டமிடப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டை பொறுத்தவரை, காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் முதல் மாநிலமாக திகழ்கிறது. இங்கு காற்று வீசும் காலங்களில் அதிகபட்சமாக 10,491 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த மின் உற்பத்தி மாநிலத்தின் மின் உற்பத்தியில் 9 சதவீதம் ஆகும்.*

*தமிழ்நாட்டின் மின் உற்பத்தி நீர் மின் நிலையங்கள், அனல் மின் நிலையங்கள், கூடங்குளம், கல்பாக்கம் அணுமின் நிலையங்கள் மூலம் நடந்து வருகிறது.*



வனத்துறை அமைச்சரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான முனைவர் க.பொன்முடி, 'கலைஞர் செய்திகள்' தொலைக்காட்சியின் ஆசிரியர் ப.திருமாவேலன் இல்லம் சென்று, அண்மையில் மறைவுற்ற அவரது தாயார் திருமதி.ப.முத்துலட்சுமி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திருமாவேலன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.